ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமோழி

# 3.2 – அஞ்சனவண்ணனை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 3.2 – அஞ்சனவண்ணனை

‡ அஞ்சன வண்ணனை ⋆ ஆயர் கோலக் கொழுந்தினை ⋆
மஞ்சனம் ஆட்டி ⋆ மனைகள் தோறும் திரியாமே ⋆
கஞ்சனைக் காய்ந்த ⋆ கழலடி நோவக் கன்றின் பின் ⋆
என் செயப் பிள்ளையைப் போக்கினேன் ⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.1** ‖

பற்று மஞ்சள் பூசிப் ⋆ பாவை மாரொடு பாடியில் ⋆
சிற்றில் சிதைத்தெங்கும் ⋆ தீமை செய்து திரியாமே ⋆
கற்றுத் தூளியுடை ⋆ வேடர் கானிடைக் கன்றின் பின் ⋆
எற்றுக்கென் பிள்ளையைப் போக்கினேன் ⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.2** ‖

நன் மணி மேகலை ⋆ நங்கைமாரொடு நாள் தொறும் ⋆
பொன்மணி மேனி ⋆ புழுதியாடித் திரியாமே ⋆
கன்மணி நின்றதிர் ⋆ கான் அதரிடைக் கன்றின் பின் ⋆
என் மணிவண்ணனைப் போக்கினேன் ⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.3** ‖

வண்ணக் கருங்குழல் ⋆ மாதர் வந்தலர் தூற்றிடப் ⋆
பண்ணிப் பல செய்து ⋆ இப் பாடி எங்கும் திரியாமே ⋆
கண்ணுக்கினியானைக் ⋆ கான் அதரிடைக் கன்றின் பின் ⋆
எண்ணற்கரியானைப் போக்கினேன் ⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.4** ‖

அவ்வவ்விடம் புக்கு ⋆ அவ்வாயர் பெண்டிர்க்கணுக்கனாய்க் ⋆
கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் ⋆ கூழைமை செய்யாமே ⋆
எவ்வும் சிலை உடை ⋆ வேடர் கானிடைக் கன்றின் பின் ⋆
தெய்வத் தலைவனைப் போக்கினேன் ⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.5** ‖

மிடறு மெழும் எழுத்தோட⋆ வெண்ணெய் விழுங்கிப் போய்⋆
படிறு பல செய்து⋆ இப்பாடி எங்கும் திரியாமே⋆
கடிறு பல திரி⋆ கான் அதரிடைக் கன்றின் பின்⋆
இடற என் பிள்ளையைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.6** ‖

வள்ளி நுடங்கிடை⋆ மாதர் வந்தலர் தூற்றிட⋆
துள்ளி விளையாடித்⋆ தோழரோடு திரியாமே⋆
கள்ளி உணங்கு⋆ வெங்கான் அதரிடைக் கன்றின் பின்⋆
புள்ளின் தலைவனைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.7** ‖

பன்னிரு திங்கள்⋆ வயிற்றில் கொண்ட அப் பாங்கினால்⋆
என் இளங்கொங்கை⋆ அமுதம் ஊட்டி எடுத்து யான்⋆
பொன்னடி நோவப்⋆ புலரியே கானில் கன்றின் பின்⋆
என் இளஞ்சிங்கத்தைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே ! ‖ **3.2.8** ‖

குடையும் செருப்பும் கொடாதே⋆ தாமோதரனை நான்⋆
உடையும் கடியன⋆ ஊன்று வெம் பரற்கள் உடை⋆
கடிய வெங்கானிடைக்⋆ கால் அடி நோவக் கன்றின் பின்⋆
கொடியேன் என் பிள்ளையைப் போக்கினேன்⋆ எல்லே பாவமே ! ‖**3.2.9** ‖

‡ என்றும் எனக்கினியானை⋆ என் மணிவண்ணனைக்⋆
கன்றின் பின் போக்கினேன் என்று⋆ அசோதை கழறிய⋆
பொன் திகழ் மாடப்⋆ புதுவையர் கோன் பட்டன் சொல்⋆
இன் தமிழ் மாலைகள் வல்லவர்க்கு⋆ இடர் இல்லையே ‖ **3.2.10** ‖

அடிவரவு — அஞ்சனம் பற்று நன்மணி வண்ணம் அவ்வவ்விடம் மிடறு வள்ளி பன்னிரு குடையும் என்றும் சீலை

அஞ்சனவண்ணனை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்